

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2025) ஈரோடு மாவட்டம், பெருந்துறை – விஜயமங்கலம் பகுதியில், வேளாண்மை–உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற “வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்– 2025” தொடக்க விழாவில், 25 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 4524 பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வெ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பா. முருகேஷ், தோட்டக்கலைத்துறை இயக்குநர் குமரவேல் பாண்டியன், சர்க்கரைத்துறை இயக்குநர் த. அன்பழகன், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2025) ஈரோடு மாவட்டம், பெருந்துறை – விஜயமங்கலம் பகுதியில், வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற ”வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தாங்கம்– 2025 தொடக்க விழாவில், கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து, ”ஈரோட்டின் மகத்துவம் மஞ்சள் அரங்கிளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் க.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பையன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வெ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிசு ஆணையர் ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பா. முருகேஷ், தோட்டக்கலைத்துறை இயக்குநர் குமரவேல் பாண்டியன், சர்க்கரைத்துறை இயக்குநர் த. அன்பழகன், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் கன்கரா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஈரோடு மாவட்டத்தில் - ரூ. 25.41 கோடியில் 4524 பேருக்கு நலஉதவிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**ஈரோடு, ஜூன்13-**

**ஈரோடு மாவட்டத்தில் ரூ.175.23 கோடி செலவில் 16 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 11 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக் கல் நாட்டி, ரூ.25.41 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 4524 பயனாளிக ளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2025) ஈரோடு மாவட் டம், பெருந்துறை - விஜயமங்கலம் பகுதியில் நடைபெற்ற ”வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் - 2025” விழாவில், 15 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில்

16 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 159 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 25 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை 4524 பயனாளிகளுக்கு வழங்கினார்.

**திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்**

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் பவானி வட்டம், ஜம்பையில்

59 இலட்சம் ரூபாய் செலவில் கால்நடை மருந்தகம்;

கூட்டுறவுத் துறை சார்பில் சத்தியமங்கலம் வட்டம் கோணமூலை கிராமத்தில் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் 1000 மெ.டன் ஏலக்கூட கிடங்கு, கண்ணம்மாபுரத்தில் 16 இலட்சம் ரூபாய் செலவில் வீரப்பம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கிளை அலுவலகக் கட்டடம், 51 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் செலவில் விரிவாக்கம் செய்யப் பட்ட முகாசிப்புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகக் கட்டடம்;

நீர்வளத்துறை சார்பில் தாளவாடி வட்டம், மல்லன்குழி கிராமம், பீமராஜ் நகரில் 40 இலட் சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் தடுப்பணை, மெட்டல்வாடி அருகில் 38 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் தடுப்பணை, பைனாபுரம் கிரா மம், தொட்டமுடுகரையில் 33 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் தடுப்பணை, மாதேஸ்வரன் கோவில் அருகில் 20 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் தரைப்பாலம் மற் றும் மண் சாலை;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் அந்தியூர் வட்டம், கொண்டையம்பா ளையம் கிராமத்தில் 35 இலட்சம் ரூபாய் செல வில் தரம் பிரிப்பு கூடத்துடன் கூடிய உலர்களம், சத்தியமங்கலம் வட்டம், பெரிய கள்ளிப்பட்டி கிராமத்தில் 35 இலட்சம் ரூபாய் செலவில் தரம் பிரிப்பு கூடத்துடன் கூடிய உலர்களம், சித்தோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 10 கோடி ரூபாய் செலவில் மஞ்சள் ஏற்றுமதி மையம்;

வனத்துறை சார்பில் அந்தியூர் வனச்சரகம், கொங்காடை கிராமத்தில் 26 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கசிவுநீர் குட்டை, கேர்மாளம் வனச்சரகம், கெத்தேசால் காவல் சுற்றில் 2 கி.மீ.-க்கு 10 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவிலும், கேர்மாளம் மேற்கு காவல் சுற்றில் 1 கி.மீ.-க்கு 5 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவிலும் அமைக்கப்பட்டுள்ள யானை புகா அகழிகள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார் பில் பெருந்துறை ஒன்றியம், பொன்முடி ஊராட் சியில் பொன்முடி ஆதிதிராவிடர் குடியிருப்பு கிரா மத்தில் 25 இலட்சத்து 47 ஆயிரம் ரூபாய் செலவில் விவசாய சேமிப்பு கிடங்கு, அந்தியூர் ஒன்றியம், நகலூர் ஊராட்சி, சோலைகர் கால னியில் 8 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செல வில் அமைக்கப்பட்டுள்ள கதிர் அடிக்கும் களம்;

என மொத்தம் 15 கோடியே 70 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் 16 முடிவுற்ற பணி களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

**அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த் தகத் துறை சார்பில் பெருந்துறை சிப்காட் தொழிற்பூங்காவில் 136 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 2000 கிலோ லிட்டர் கொள்ளளவுள்ள ஜீரோ திரவ வெளியேற்ற (ZLD) அடிப்படையிலான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை வடிவ மைத்து, கட்டுமானப் பணிகள், இயக்குதல் மற் றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளும் பணி;

நீர்வளத்துறை சார்பில் அணை புனரமைத் தல் மற்றும் மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் சத் தியமங்கலம் வட்டத்தில் உள்ள கீழ்பவானி அணை (பவானி சாகர் அணை) 19 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து மேம்படுத்தும் பணி;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி வட் டாரத்தில் 1 கோடியே 77 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் சேகரிப்பு கட்ட மைப்புகள் மற்றும் நீர்பாசன வசதிப் பணிகள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார் பில் 1 கோடியே 10 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 2 விவசாய சேமிப்பு கிடங்குகள் மற்றும் 6 கதிரடிக்கும் களங்கள்;

என மொத்தம் 159 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்**

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் 2163 பயனாளிகளுக்கு 2 கோடியே 72 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னு யிர் காப்போம் திட்டம், நுண்ணீர் பாசனத்திட் டம், ஒருங்கிணைந்த பண்ணையம், தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டம், தேசிய சமையல் எண்ணெய் இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், மாநில வேளாண் வளர்ச்சி திட்டம், விதை கிராம திட்டம், தமிழ்நாடு நீர்வள நில வள மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்களில் நிதியுதவி;

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில்

8 பயனாளிகளுக்கு 48 இலட்சத்து 14 ஆயி ரம் ரூபாய் மதிப்பிலான வேளாண் உட்கட்ட மைப்பு நிதி, தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கம் திட்டத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், வேளாண்மை கட்டமைப்பு நிதி, பொருளீட்டுக் கடன் ஆகிய திட்டங்களில் நிதியுதவி;

வேளாண் பொறியியல் துறை சார்பில் 23 பயனாளிகளுக்கு 16 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான மானியத்துடன் வேளாண் கருவிகள் மானியத்தில் வழங்குதல், மானியத் துடன் கூடிய மின்மோட்டார்;

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் 1256 பயனாளிக்ளுக்கு 9 கோடியே 24 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நுண்ணீர் பாசன திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டம், மானாவாரி பகுதி மேம்பாட்டு திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களில் உதவிகள்;

தாட்கோ சார்பில் 23 பயனாளிகளுக்கு 40 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நன் னிலம் மகளிர் நில உடைமைத் திட்டம்,

**முதலமைச்சரின் Arise மற்றும் பிரதம மந்திரி அஜய் திட்டங்களில் உதவிகள்;**

கூட்டுறவுத் துறை சார்பில் 746 பயனாளிக ளுக்கு 8 கோடியே 70 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பயிர்க்கடன், கால்நடை பராமரிப்பு கடன், மத்தியகாலக் கடன், கூட்டுப் பொறுப்பு குழுக் கடன் ஆகிய திட்டங்களில் கட னுதவி;

மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் 2 பய னாளிகளுக்கு 1 கோடியே 58 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான வேளாண் சார்ந்த உற்பத்தி நிறுவனங்களுக்கு முதலீட்டு மானி யம் வழங்குவதற்கான ஒப்பளிப்பு ஆணை;

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 21 பயனாளிகளுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் 4 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய்க்கான இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்கு உதவித்தொகை;

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 200 பயனாளிகளுக்கு 58 இலட்சம் ரூபாய் மதிப்பி லான கால்நடை தீவனத்திற்கான சாஃப் கட்டர்கள்;

மீன்வளத்துறை சார்பில் 21 பயனாளிக ளுக்கு 6 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப் பிலான புறக்கடை அலங்கார மீன்வளர்ப்பு அல குகள் மற்றும் மீனவ மகளிருக்கு அலைகள் திட்டத்தில் நுண்கடன்;

முன்னணி வங்கித் திட்டத்தின் கீழ் 8 பயனா ளிகளுக்கு 88 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கிசான் கடன் அட்டைகள், விவசாய கால கடன்;

பட்டு வளர்ச்சித் துறை சார்பில் 53 பயனாளி களுக்கு 51 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் மதிப் பிலான பட்டுப்புழு வளர்ப்பு மனை, தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தில் மல்பெரி நடவு, பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்களுக்கான உத விகள்;

என மொத்தம் 25 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 4524 பயனாளிகளுக்கு முதலமைச்சர் அவர் கள் வழங்கினார்.

இவ்விழாவில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை - உழ வர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன் னீர்செல்வம், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச் சர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண் மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல் விழி செல்வராஜ், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளு மன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கே.இ.பிரகாஷ், கே.சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி. சந்திரகுமார், ஏ.ஜி.வெங் கடாசலம், பூண்டி கலைவாணன், முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீன வர் நலத்துறை செயலாளர் டாக்டர் என். சுப்பை யன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற் றும் அரசு செயலாளர் வெ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலைத் துறை இயக்குநர் குமரவேல் பாண்டியன், சர்க் கரைத்துறை இயக்குநர் த.அன்பழகன், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உழவர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

மாநில அளவிலான ‘நீட்’ எஸ்.எஸ். கலந்தாய்வின் 2வது சுற்றில்

# தமிழ்நாட்டில் பணியில் உள்ள மருத்துவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 50% இடங்களை தக்க வைத்து கிடைக்கச் செய்வதை உறுதி செய்வீர்!

## ஒன்றிய அமைச்சருக்கு - அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடிதம்!

*சென்னை, ஜூன் 13-*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (11.06.2025) ஒன்றிய அரசு சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா அவர்களுக்கு மாநில ஒதுக்கீட்டின் கீழ், தமிழ்நாடு - உயர்சிறப்பு முதுநிலை மருத்துவ இடங்கள் நிரப்புவது தொடர்பாக நேர்முக கடிதம் எழுதியுள்ளார்.*

*மாநில ஒதுக்கீட்டின் கீழ், தமிழ்நாடு உயர் சிறப்பு முதுநிலை மருத்துவ இடங்கள் குறித்த ஒரு முக்கியமான பிரச்சினையை தங்களது அவசர கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.*

*உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில், உயர் சிறப்பு முதுநிலை மருத்துவ படிப்புகளில் 50 விழுக்காடு இடங்கள் தமிழ்நாட்டில் அரசுப் பணியில் உள்ள மருத்துவர்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நீட் எஸ்.எஸ் (NEET - Super Speciality) தேர்வில் மாநில இட ஒதுக்கீட்டில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான கலந்தாய்வு 27.05.2025 அன்று நிறைவடைந்தது. 29.05.2025 அன்று, தமிழ்நாடு தேர்வுக் குழு, பணியில் உள்ளவர்களுக்கு அவர்கள் விரும்பும் வகையில் இடங்களை தேர்வு செய்ய அனுமதிக்கும் வகையில், 2வது மாநில சுற்று அட்டவணையைக் குறிப்பிடுமாறு DGHSஐ முறையாக கேட்டுக்கொள்ளப்பட்டது.*

*நீட் எஸ்.எஸ், மாநில ஒதுக்கீட்டு கலந்தாய்வின் 2வது சுற்றில் மாநில பணியில் உள்ள மாணவர்களுக்கு அவர்கள் விரும்பும் வகையில் இடங்களை தேர்வு செய்ய, மருத்துவ விண்ணப்பதாரர்களிடமிருந்து ஏராளமான கோரிக்கைகள் வந்துள்ளன என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்பு கிறேன்.*

*ஆனால், மாநில அளவில் கட்டாய இரண்டாம் சுற்று கலந்தாய்வு நடத்தாமல், நிரப்பப்படாத பணியிடங்களை அகில இந்திய ஒதுக்கீட்டிற்கு மாற்றுவது, தமிழ்நாடு அரசு பணியில் உள்ள மருத்துவர்கள் அவர்கள் விரும்பும் வகையில் இடங்களை தேர்வு செய்யவோ அல்லது மேற்கொண்டு கலந்தாய்வில் பங்கேற்கவோ அவர்களுக்கு உள்ள உரிமையை பறிக்கும் செயலாகும். மேலும், இது மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கு முரணான தாகும்.*



*எனவே, மாநில ஒதுக்கீட்டின் கீழ், தமிழ்நாட்டில் பணியில் உள்ள மருத்துவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து 50 விழுக்காடு இடங்களும் தக்கவைக்கப்பட்டு, மாநில அளவிலான நீட் எஸ்.எஸ் கலந்தாய்வின் 2வது சுற்றில் கிடைக்கச் செய்வதை உறுதி செய்ய தாங்கள் தனிப்பட்ட முறையில் தலையிட்டு உறுதி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.*

*இந்த பொருட்பாட்டில் தங்களது ஒத்துழைப்பையும் ஆதரவையும் வேண்டுகிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தனது கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.*




தி.மு.க.
இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தூத்துக்குடி வடக்கு மற்றும் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | தூத்துக்குடி வடக்கு | கலைஞர் அரங்கம், எட்டையாபுரம் சாலை, தூத்துக்குடி. |
| | மாலை 4.00 மணி | திண்டுக்கல் மேற்கு | அபூர்வா ஹால், ஒட்டன்சத்திரம். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 10-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி